புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஆகஸ்ட் (AUGUST) 20, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 34 • விலை(PRICE) ரூ.6.00






# உற்சாக வெள்ளத்தில் காரைக்குடி மாநாடு!

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய “மாற்றத்தை நோக்கிய வாழ்வியல் பரப்புரைப் பயண நிறைவு விழா மாநாடு” ஆகஸ்ட் 12 ,2026 அன்று காரைக்குடியில் சுயமரியாதை சுடரொளி கானாடுகாத்தான் வை.சு சண்முகம் அரங்கில், (பாண்டியன் தியேட்டர் அருகில்) மாலை 6 மணிக்குத் தொடங்கியது.

முன்னதாக காரைக்குடி ஐந்து விளக்குப் பகுதியில் இருந்து பரப்புரைப் பயணத்தில் பங்கேற்ற தோழர்கள் மற்றும் தமிழ்நாடு முழுவதும் இருந்து மாநாட்டிற்கு வருகை தந்த கழகத் தோழர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

பேரணியில் உற்சாகமாக தோழர்கள் கலந்து கொண்டு கொள்கை முழக்கங்களை எழுப்பியவாறு மாநாட்டுத் திடலை நோக்கி அணிவகுத்து வந்த காட்சி உணர்ச்சிமயமாக இருந்தது.

பேரணி செல்லும் பாதையில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், மாநாட்டு அமைப்பாளர் காரைக்குடி இளங்கோ ஆகியோர் மாலை அணிவித்தனர். தோழர்கள் பெரியார் வாழ்க! புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் வாழ்க! என்று உணர்ச்சி முழக்கமிட்டனர்.

மாநாட்டுத் திடலில் அருகாமையில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் மற்றும் தோழர்கள் மாலை அணிவித்து கொள்கை முழக்கமிட்டனர்.

மாநாடு மாலை 6:00 மணிக்கு கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. லதா,சத்யா, மேட்டூர் கோவிந்தராஜ், சித்திர சேனன், திராவிட மகிழன் இணைந்து பாடல்களைப் பாடினர். உமாபதி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மேட்டூர் தோழர்கள் சீனிவாசன், அண்ணாதுரை, குமரன், காளியப்பன் மற்றும் கார்மேகம் தாளக் கருவிகளை இசைத்தனர். மாநாடு தொடங்கிய சில மணித்துளிகளில் பெரு மழையால் தடைபட்டாலும் மழை நின்ற பிறகு அதே உற்சாகத்துடன் தொடர்ந்து மாநாடு நடைபெற்றது.

மாநாட்டிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். சிவகங்கை மாவட்டத் தலைவர் நா.முத்துக்குமார், காரைக்குடி மாநகர அமைப்பாளர் அ. ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவகங்கை மாவட்டத் தலைவர் பெரியார் முத்து வரவேற்புரையாற்றினார். மாநாட்டில் பரப்புரைப் பயணத்தின் நோக்கம் குறித்து கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அறிமுக உரை நிகழ்த்தினார்.

மாநாட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு தோழர்களின் கையொலிகளுக்கிடையே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன்,பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி.இராம இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி, ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

மாநாட்டின் சிறப்பு அழைப்பாளர் ’தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் கழகத்தின் ஜாதி ஒழிப்பு இயக்கத்தை வெகுவாகப் பாராட்டினார். மேலும் ஜாதியத்தின் இயங்கியல் குறித்தும் அம்பேத்கர் அவர்களின் "ஜாதியை ஒழிக்கும் வழி" என்ற நூலின் கருத்துகள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற தேவையை வலியுறுத்தியும் பேசினார். **(அவரது உரை பின்னர் வெளிவரும்).**

பரப்புரைப் பயணத்தில் பங்கேற்ற கலைக்குழுவினர், பயணத்தில் பங்கேற்ற தோழர்கள், பரப்புரைப் பயணத்திற்கு உழைத்த தோழர்கள் அனைவருக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயனாடையும், குழுத் தலைவர்களுக்கு நினைவுக் கேடயமும் வழங்கி சிறப்பித்தார்.

பரப்புரைப் பயணத்துக்காக வெளியிடப்பட்ட நூல்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டார். உலகத் தமிழர் பேரவை துணைத் தலைவர் சா.இராமன், தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு மாவட்டச் செயலாளர் வேணுகோபால், தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பாவெல் , பெரியார் பேரவைத் தலைவர் நாகேஸ்வரன், விசிக மாவட்டச் செயலாளர் உஞ்சனை சரவணன், ‘நாளை விடியும்’ இதழ் ஆசிரியர் அரசெழிலன், மக்கள் அதிகாரம் மாநில செயற்குழு உறுப்பினர் நாகராஜன், ஐந்திணை மக்கள் கட்சி இணை பொதுச் செயலாளர் கருணாநிதி, திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம் ஒருங்கிணைப்பாளர் நீ. இளங்கோ, சிபிஅய் மாநகரச் செயலாளர் சிவாஜி காந்தி, முடியரசனார் அவைக்களம் பாரி முடியரசன், தமிழ் வழிக் கல்வி இயக்கம் சின்னப்பத் தமிழர், தங்க குமரவேல் ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டனர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

நாமக்கல், ஈரோடு, கோபி, சேலம், திருப்பூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கரூர், மயிலாடுதுறை, சென்னை, கோவை, திருச்சி, மதுரை, கடலூர் பெங்களூர், தர்மபுரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கழகத் தோழர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**செய்தி- பரிமளராசன்**




மாநாட்டில் நடைபெற்ற ஜாதி மறுப்புத் திருமணம்

# மாநாட்டிலிருந்து சில துளிகள்...

★ மாநாட்டுத் திடலில் சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் குறித்த வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய பதாகைகள் இடம் பெற்றிருந்தன.

★ மாநாட்டில் பார்வையாளர்களிடம் துண்டு ஏந்தி திரட்டப்பட்ட ரூ.7420 நிதி, மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பாக ரூ.5,000, மதுரை மாவட்டக் கழகம் சார்பாக ரூ.15,000 கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு வழங்கப்பட்டது.

★ நாமக்கல் மாவட்டக் கழகம் சார்பாக தோழர்கள் ரூ.10,000 மாநாட்டுக்கு நன்கொடையாக வழங்கினர்.

★ மாநாட்டு முன்னேற்பாட்டுக் குழுவினரான அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன் மற்றும் தோழர்கள் பெரியார் நம்பி, குமரேசன் ஆகியோர் கழக ஆதரவாளர்களை சந்தித்து நன்கொடை திரட்டும் பணிகளை மேற்கொண்டனர்.

★ பரப்புரைப் பயணத்துக்கும், மாநாட்டுக்கும், மயிலாப்பூர் பகுதி கழகம் சார்பாக, ரூ. 5,000-அய் தோழர் மனோகர் நன்கொடையாக வழங்கினார்.

★ இந்த பரப்புரைப் பயணத் திட்டத்துக்கும், துண்டறிக்கை தயாரிப்பு, சீருடை தயாரிப்புக்கும் நிதி திரட்டி மாநாட்டு பணிகளுக்கும் முதுகெலும்பாக நின்று செயல்பட்டவர் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன்.

★ வெளியீட்டுச் செயலாளர் கோபி.இராம இளங்கோவன் கோபி மாவட்டக் கழகம் சார்பில் மாநாட்டுக்கு ரூ.30,000 மற்றும் மாநாட்டு மேடைச் செலவுகளுக்கு ரூ.20,000 என்று மொத்தம் ரூ.50,000 நிதி வழங்கினார்.

★ ஆக-11, அன்று காரைக்குடி பெரியார் பெருந்தொண்டர் ஆசிரியர் இராமன் கழகத் தலைவர் மற்றும் மாநாட்டுக்கு பணியாற்றிய கழகத் தோழர்கள் 25 பேருக்கு இரவு அசைவ உணவை தனது பண்ணை இல்லத்தில் வழங்கினார்.

★ கழகத்தின் ஒவ்வொரு மாநாட்டிலும் ஜாதி மறுப்புத் திருமணங்கள் நடைபெறுவது வழக்கம். இந்த மாநாட்டிலும் சென்னிமலை வெங்கடேஷ்-லலிதா இணையர்களின் மகள் கீர்த்தனா அவர்களுக்கும் கழகத் தோழர் திருப்பூர் முத்துலெட்சுமி-ஆண்டவர் இணையர்களின் மகன் சக்தி, ஆகியோருக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. தோழர் முத்துலெட்சுமி தன்னுடைய 2 மகன், 3 மகள் ஆகியோருக்கு ஜாதிமறுப்புத் திருமணங்களை செய்து வைத்தவர். திருச்சியில் நடந்த கருஞ்சட்டை மாநாட்டிலும் இதே போல் தனது குடும்பத்தின் ஜாதிமறுப்புத் திருமணங்களை எளிமையாக நடத்தி வழிகாட்டி வருகிறார்.

★ பயணக்குழுவினர் மாநாட்டு நோக்கத்தை அச்சிட்ட கருப்பு டி-சட்டைகளை அணிந்து வந்தனர். அவர்கள் படைவீரர்களாக காட்சி அளித்தனர்.

★ கழகத் தோழர்கள் பெரியார் முத்து, இளங்கோவன், ரமேஷ், முத்துக்குமார், சரவணன், பாலசந்தர், வினோத் ராஜா, திருநாவுக்கரசு, தவச்செல்வம், பெரியார் நம்பி, குமரேசன், மணிமாறன் (தமிழக மக்கள் முண்ணனி), ஆகியோர் தோரணம் கட்டுதல், கடைவீதி வசூல் உள்ளிட்ட மாநாட்டுப் பணிகளுக்கு இரவு பகல் பாராது உழைத்து மாநாட்டின் வெற்றிக்கு அடித்தளமிட்டனர்.

★ சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் அருண், மயிலை குமார், எழிலரசன், இளவரசன், பிரபாகரன், பிரசாந்த் மற்றும் அன்னூர் விஷ்ணு ஆகியோர் மூன்று நாட்களுக்கு முன்பே சென்று கடும் உழைப்பை வழங்கி மேடை வடிவமைப்புப் பணிகளை செய்து முடித்தனர். மாநாட்டு 'லோகோ'வுடன் இவர்கள் அமைத்திருந்த அழகிய செல்ஃபி பீடத்தில் ஏராளமான தோழர்கள் படம் எடுத்து மகிழ்ந்தனர்.


**நமது செய்தியாளர்.**

# மாநாட்டுத் திடலில் இயக்க முன்னோடிகள் வரலாறு!

**தென் மாவட்டங்களைச் சார்ந்த 'சுயமரியாதைச் சுடரொளி'களின் வரலாறுகள் படங்களுடன் மாநாட்டுத் திடலில் காட்சிப்படுத்தப்பட்டன.**

### சுயமரியாதை இயக்க வீரர் சிவகங்கை இராமச்சந்திரனார் (16.09.1884–26.02.1933)

★ தென் மாவட்டங்களில் காரைக்குடிக்கு அருகே உள்ள சிவகங்கையைச் சார்ந்த இராமச்சந்திரனார் சுயஜாதியை எதிர்த்து தீண்டப்படாத மக்களுக்காக போராடிய சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவர். முக்குலத்தோர் சமூகத்தில் முதல் முதலாக சுயமரியாதை இயக்கக் கொள்கைகளுடன் அரசியலுக்கு வந்த தலைவர்.



★1929 செங்கல்பட்டு மாநாட்டில் பெரியார் நடத்திய முதல் சுயமரியாதை மாநாட்டில் பெயருக்குப் பின்னால் ஒட்டிக்கொண்டிருக்கும் ஜாதிப் பெயர்களை நீக்க வேண்டும்; ஜாதி,மத அடையாளங்களை தவிர்க்க வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை முன்மொழிந்தவர் இவர் தான். அப்போது தனது பெயருக்குப் பின்னால் ஒட்டி இருந்த 'சேர்வை' பெயரை நீக்குவதாக அறிவித்தார். தனது நெற்றிப் பொட்டுக்களையும் அழித்துக் கொண்டார். தேவஸ்தான குழுத் தலைவராக இருந்தபோதுதான் தனது அதிகாரத்தின் கீழே இருந்த இந்து கோயில்களின் கிணறுகள், சாலைகள், குளங்களில் தீண்டாமையைத் தடை செய்து பொதுப் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

★ தாலுக்கா போர்டு தலைவராகத் தேர்வு செய்யப்பட்டபோது பதவியேற்பு நிகழ்ச்சியில் "என் கரங்களில் உள்ள பேனா ஒரு பார்ப்பனருக்குக் கூட உத்தியோகம் வழங்க கையெழுத்திடாது" என்று வெளிப்படையாக சூளுரைத்தார்.

★ இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் தலைவராக பெரியார் இவரைத்தான் தேர்வு செய்தார். அதில் அவர் நிகழ்த்திய உரை கருத்தாழமிக்கது. பிறவி ஆதிக்கத்துக்கும் பிராமணியத்திற்கும் பிறப்புரிமை என்பது இயற்கையின் விதி. பிறவி ஆதிக்கம் இயற்கை விதிக்கு எதிரானது. இதற்கான மூலதனம் சுயநலம். ஒரு குறிப்பிட்ட சமூகம் தனக்கான சிறப்பு ஆதிக்கத்தை திணிக்கிறது. இதை எதிர்த்துப் போராட ஒவ்வொரு மனிதருக்கும் பிறப்புரிமை உண்டு. இந்த உரிமைக்கு போராடுவதுதான் சுயமரியாதை இயக்கம் என்று சுயமரியாதை கொள்கைக்கு இலக்கணம் வகுத்தார். 1928-கொட்டாரம்பட்டியில் பெரியார் படத்தைத் திறந்து வைத்து அவர் நிகழ்த்திய உரை தான் இப்போதும் நாம் மேடையில் பேசிக் கொண்டு வருகிறோம்.

கர்ப்ப கிரகத்துக்கு- அய்யர் உத்தரவு
கல்யாணம் செய்வதற்கு - அய்யர் உத்தரவு
புது வீடு போவதற்கு - அய்யர் உத்தரவு
பிள்ளை பிறப்பதற்கு - அய்யர் உத்தரவு
பெயர் சூட்டுவதற்கு - அய்யர் உத்தரவு
இறப்புக்கு - அய்யர் உத்தரவு
மோட்சம் செல்வதற்கு- அய்யர் உத்தரவு

- இப்படி அய்யர்கள் உத்தரவுப்படியே நாம் வாழ்கிறோம் என்று 1928-லேயே அவர் படம் பிடித்துக் காட்டியது வியப்பைத் தருகிறது.

★ இவரது கொள்கைப் பற்று மற்றும் நிர்வாக ஆளுமையைக் கண்ட காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி கட்சி அரசியலுக்கு அழைத்த போது அவர் அளித்த பதில் தான் ஆகச்சிறப்பு. "உங்கள் பூணூலை அகற்றினால் அரசியலுக்கு வருகிறேன்" என்பதுதான் அவரது பதில். நீதிக்கட்சி ஆட்சியில் முனுசாமி முதல்வராக இருந்த போது அமைச்சரவையில் இணைய அழைப்பு வந்த போது "அரசியலில் நம்பிக்கை இல்லை. சமுதாய இயக்கத்தில் பணியாற்றுவதையே நான் விரும்புகிறேன் என்று மறுத்துவிட்டார்.

★ ஆதிதிராவிடர் உரிமை மாநாடுகளை நடத்தினார். பார்ப்பனர்களை விட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் தான் ஆதி திராவிடர்கள் மீது கொடுமைகளை இழைக்கிறார்கள் என்று தனது சொந்த சமூகத்தையே எதிர்த்தார். ஆதி திராவிடர் பாதுகாப்புக்கு துப்பாக்கி வழங்க வேண்டும் என்றார். தனது 49 வயதில் முடிவெய்தினார். அப்போது 'குடி அரசு' பத்திரிக்கையில் பெரியார் தனது கரங்களில் ஒன்று போய்விட்டது என்று எழுதினார். திராவிடர் விடுதலைக் கழகம் மாநாட்டில் நிறைவேற்றிய சுயஜாதி மறுப்பு இயக்கத்துக்கு முன்னோடியாக வழிகாட்டியவர் சிவகங்கை இராமச்சந்திரனார்.

### சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா (21.08.1893–20.06.1956)

★ காரைக்குடியில் தனவைசிய ஊழியன், குமரன், சண்டமாருதம் இதழ்கள் மூலம் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பியவர் சொ. முருகப்பா.



★ மத மூடநம்பிக்கைகளை எதிர்த்துத் தலையை மழிக்கும் வழக்கத்திற்கு மாறாகக் கிராப்பு வைத்துக்கொள்ளும் போராட்டத்தை முன்னெடுத்தார்.

★ கைம்பெண் மறுமணத்தைத் தீவிரமாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுடன், பெரியார் தலைமையில் மரகதவள்ளி அம்மையாரை மறுமணம் செய்து சமூக மாற்றத்திற்கு இருவருமே இணையர்களாக பாடுபட்டார்கள்.

### சுயமரியாதைச் சுடரொளி- காரைக்குடி இராம.சுப்பையா (14.11.1908–21.05.1997)

★ சுயமரியாதை இயக்கத்தின் தீவிர தொண்டராக விளங்கியவர். பெரியாரின் பகுத்தறிவு, ஜாதி மறுப்பு, சமத்துவக் கொள்கைகளை மக்களிடையே பரப்பியதுடன், சுயமரியாதைத் திருமணங்களையும் முன்னெடுத்தார். இந்தி, வடவர் ஆதிக்க எதிர்ப்பு போராட்டமான கல்லக்குடி இரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



★ இவரது புதல்வர்கள் திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுயமரியாதை இயக்க வீராங்கனை மஞ்சுளா பாய்

★ தஞ்சை மராட்டிய சரபோஜி மன்னர் குடும்பத்தில் பிறந்து, இளம்வயது கைம்பெண்ணான மஞ்சுளாபாய் அம்மையார், பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து தீவிர களப்பணியாற்றினார். 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார்.

★ வை.சு.சண்முகனாரைச் சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்ட இவர், பெரியார் மணியம்மை குழந்தைகள் காப்பகத்தை கவனித்து வந்தார்.



★ ஜாதி ஒழிப்பு, தேவதாசி ஒழிப்பு மற்றும் பெண் விடுதலைக்காகப் பாடுபட்டதுடன், மூவலூர் ராமாமிர்தம்மாள் போன்ற சமகாலத் தலைவர்களுடனும் இணைந்து தமிழ்நாட்டுச் சமூக சீர்திருத்த வரலாற்றில் முக்கியப் பங்காற்றினார்.

### சுயமரியாதை இயக்க வீராங்கனை பார்வதி


★ காரைக்குடியைச் சேர்ந்த சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடி வீராங்கனை பார்வதி அம்மையார், புகழ்பெற்ற சமூகச் சீர்திருத்தவாதி வை.சு.சண்முகனாரின் மகளாவார். சிறுவயது முதலே தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு வளர்ந்த இவர், மாநாடுகளில் கலந்துகொண்டு பெண்களின் கல்வி உரிமை, சொத்துரிமை மற்றும் பகுத்தறிவுக் கொள்கைகள் குறித்துத் தீவிரமாகப் பரப்புரை செய்தவர்.



★ 1935 ஆம் ஆண்டு தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற தனது சுயமரியாதைத் திருமணத்தின்போது, "பெண்ணடிமைத்தனத்தின் குறியீடாக உள்ள தாலியைக் கட்டிக்கொள்ள மாட்டேன். ஒருவேளை தாலி கட்டுவதாக இருந்தால், நானும் பதிலுக்கு மாப்பிள்ளைக்குத் தாலி கட்டுவேன்" என்று துணிச்சலாகக் கூறி, தாலி கட்டும் சடங்கை முற்றிலுமாக மறுத்தார்.

### வீறுகவியரசர் முடியரசன் (07-10-1920–03.12.1998)

★ காரைக்குடியில் வாழ்ந்த வீறுகவியரசர் முடியரசனார். தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையும் தன் கவிதைகள் வாயிலாகப் பரப்பிய கவிஞர் ஆவார்.



★ ஜாதி ஒழிப்பு, பகுத்தறிவு, சமத்துவம் மற்றும் பெண்ணுரிமையை முதன்மையாக வைத்துப் பல புரட்சிகரப் படைப்புகளைத் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கியவர். தானும் தன் பிள்ளைகளும் சாதி மறுப்புத் திருமணம் செய்து, கொள்கை வாழ்வு வாழ்ந்தவர்.

★ பெரியாரின் சிந்தனைகளைத் தனது கவிதைகளில் ஆழமாக விதைத்து, திராவிட இயக்கக் கவிதையுலகில் அழியாப் புகழ்பெற்றவர்.

★மூடநம்பிக்கை மற்றும் ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் ★ எண்ணிக்கை பலமற்ற சேவை ஜாதிப் பிரிவினருக்கு சமூகநீதி இயக்கம், ★ஆட்சிப் புலத்தில் மதத்தைத் திணிக்கும் அமைச்சர்களுக்குக் கண்டனம்

# கழக மாநாட்டின் தீர்மானங்கள்

***12.08.2026 அன்று காரைக்குடியில் நடைபெற்ற மாற்றத்திற்கான வாழ்வியல் பரப்புரைப் பயணங்களின் நிறைவு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்.***

## எதிர்ப்பைப் பதிவு செய்க

**தீர்மானம்-1:** *ஆன்மீக சொற்பொழிவு என்ற பெயரில் பார்ப்பன சொற்பொழிவாளர்களும், பிராமணர் மாநாடு போன்ற மாநாடுகளில் உரையாற்றுபவர்களும் முன்வைக்கும் பல வாதங்கள் அரசியல் சட்டம் தனது நோக்கமாக கொண்டுள்ள சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றிற்கு எதிராகவும், பிற சமுதாய மக்களை இழிவுபடுத்துவதாகவும் வன்கொடுமைத் தடுப்புச் சட்ட குற்ற வரையறைக்குள் வருவதாகவும் உள்ளன.*

*அ) அவ்வாறான உரைகள் ஆற்றப்படும் இடங்களிலேயே எதிர்ப்பினைப் பதிவு செய்ய வேண்டுமாறு தோழர்களை, பார்ப்பனரல்லாத மக்களை - குறிப்பாக இளைஞர்களை இம்மாநாடு தமிழ்நாட்டு வேண்டி கேட்டுக்கொள்கிறது*

*ஆ) தனி இடங்களில் அவ்வாறு பேசப்பட்டாலும் காணொலி வழியாக பொது வெளியில் பரப்பப்படும் போது உரிய நிறுவனங்களுக்கு புகார் (Report) பதிவிடுமாறும், அதே வேளையில் காவல் நிலையங்களில் புகார் அளித்து உரிய ஒப்புகையைப் பெறுமாறும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.*

## குரலற்ற சேவை ஜாதி மக்கள்

**தீர்மானம்-2:** *எண்ணிக்கை பலமும், பொருளாதார பலமும் இல்லாமல், சேவை ஜாதிகளாய் உடை வெளுத்தல், சவரம் செய்தல், கல் உடைத்தல், மண்பாண்டம் செய்தல், கூடை முடைதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு ஒவ்வொரு கிராமத்திலும் 50 பேருக்கு மிகாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறனர். எண்ணிக்கை பலமோ, பொருளாதார பலமோ அற்றோராய், ஊராட்சி மன்றத்தில் உறுப்பினராகக் கூட வரமுடியாத நிலையில், தங்கள் கருத்துக்களை கோரிக்கைகளை சமூகத்தின், அரசின் காதுகளுக்கு எட்டச் செய்யும் வலிமையும் அற்றவர்களாக அவர்களின் நிலைநீடிக்கிறது.*

*இவர்களோடு சீர் மரபினர் (DNC/DNT) என்று பட்டியலிடப்பட்டுள்ள ஜாதிகளாக உள்ளோரில் பெரும்பான்மையினர் - இன்று வரை அரசியல் பணிகளோ, அரசுப் பணிகளே கிட்டாதவர்களாக பதவிகளைப் பெறும் வாய்ப்பே அற்றவர்களாக அமிழ்த்தப்பட்டுக் கிடக்கும் சமூகத்து மக்களின் பாடுகளைப் பொதுச் சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வந்து அவர்களுக்கான உரிமைகளுக்காக குரல் கொடுப்பது சமூக நீதியின் அவசியத் தேவை என்று திராவிடர் விடுதலைக் கழகம் கருதுகிறது. "குரலற்ற மக்களின் குரலாக" ஒலிக்கும் வகையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அம்மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் கருத்தரங்குகளை நடத்தி அரசின் கவனத்திற்கும் பொதுச் சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்வது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது. இம்முன்னெடுப்புகளுக்கு மனிதநேயத்தோடு பொதுச் சமூகத்தின் 'ஆதரவைக் கோரி நிற்கிறது திராவிடர் விடுதலைக் கழகம்.*

*குரலற்றவர்களான இந்தப் பிரிவினரின் உள்ளக் குமுறலை எடுத்துரைக்க குறைந்த அளவு உள்ளாட்சிகளில் முதற்கட்டமாக மட்டுமாவது ஊராட்சிகளில் 1 இடமும், ஒன்றியங்களில் 2 இடங்களும், மாவட்ட ஊராட்சி மன்றங்களில் 4 இடங்களும் என்ற அளவில் -பல்வேறு சமுதாயங்களுக்கும் வாய்ப்பு அளிக்கும் வகையில் சுழற்சி முறையில், நியமன உறுப்பினர்களாக அமர்த்த வேண்டும் என தமிழ்நாட்டு அரசினை இம்மாநாடு வலியுறுத்துகிறது.*

## ஆணவப் படுகொலை தடுப்பு சட்டம்

**தீர்மானம்-3:** *ஆணவக் கொலைகள் என்பது வாரந்தோறும் வெளியாகும் செய்தியாக இப்போது மாறிவிட்டது. ஜாதிச் சங்கங்கள் ஜாதிக் கட்சிகளாக இடம் பெற்று விடுகின்றன. பெரும்பாலும் கள்ளச் சாராயம், கந்து வட்டி, கல்வித்தந்தைகள் அரசியல் அரங்குக்குள் நுழைந்துள்ளனர். ஈட்டிய பொருளைப் பாதுகாக்கவும், அரசிடம் தங்கள் பேர ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் ஜாதிச் சங்கங்களை உருவாக்கி காலப்போக்கில் அவற்றை அரசியல் கட்சிகளாக மாற்றி ஒரு தேர்தல் கூட்டணியில் இணைந்து கொள்கின்றனர்.*

### ஜாதிப் பெருமை வெற்றுக் கூச்சல்

*ஆனால், தங்களது மதத்தில் 'சூத்திர' நிலையில் அவமானப்படுவதையோ, தாங்கள் எழுப்பிய கோயிலில்கூட வழிபாடு நடத்த உரிமையும் அற்று வெளியில் நிறுத்தப்படுவதையோ, இந்திய அரசுப் பணிகளிலும், அயலகப் பணிகளிலும், அயலக அரசுத் தூதுவர்களாகவோ, ஒன்றிய அலுவலகங்கள், செயலாளர்கள், நீதித்துறை, செய்தி ஊடகம், பெரு வணிக நிறுவனத் தலைமை போன்றவற்றில் எந்த பிரதிநிதித்துவமும் இல்லாததையோ இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. தாங்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறவும், பேர ஆற்றலை உயர்த்திக் கொள்ளவும் - மன்னர் பரம்பரை போன்ற வெற்றுக் கூச்சல்களால் ஜாதிப் பெருமை பேசி, அப்பாவி பாமர மக்களை நம்ப வைத்து, அவர்களிடம் ஜாதிப் பெருமித உணர்வை வளர்க்கின்றனர். தங்கள் ஜாதிப்பெண் வேறு ஜாதி ஆண்களை மணம் முடிப்பதால் தங்கள் பாரம்பரிய குலப் பெருமை அழிந்துவிடும் என்பதை அழுத்தமாக நம்ப வைத்து, ஜாதி உணர்வைக் கூர்மைப் படுத்தி, வெறியூட்டி விடுகின்றனர். அதன் விளைவே இந்த ஆணவக் கொலைகள் ஆகும்.*

*அ) இந்த ஆணவக் கொலைகள் பற்றி ஆராய்ந்த தேசிய சட்ட ஆணையம் ஏற்கனவே 2012ஆவது ஆண்டிலேயே தனது 242 வது அறிக்கையில் தனி சட்டத்தின் தேவையைப் பற்றியும், தேசிய மகளிர் ஆணையத்தோடு கலந்து பேசி தயாரித்து, அதற்கான ஒரு சட்ட முன்வரைவை முன் வைத்துள்ள இந்த நிலையில் திருமண சுதந்திரத்தில் தலையிடுவதைக் தடுக்கும் சட்டம் என்ற பெயரால் ராஜஸ்தானிலும், கருநாடகத்திலும் சட்டமன்றங்கள் தீர்மானங்களைக் கடந்த ஆண்டு நிறைவேற்றியும் இருக்கின்றன. அதன் 'தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசும் அவ்வாறான ஒரு தனிசட்ட வரைவை சட்டமன்றத்தில் உடனடியாக நிறைவேற்றி சட்டமாக்க வேண்டும் என்று இம் மாநாடு வலியுறுத்துகிறது.*

*ஆ) சட்டங்கள் நிறைவேற்றி விடுவதே குற்றங்களைத் தடுத்து விடாது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். இருப்பினும் இவ்வாறான ஆணவக் கொலைகளை அம்பலப்படுத்தியும், அதைக் கைவிட வேண்டிய தேவைகளை வளர்ந்து வரும் நாகரீக சமூகத்தில் ஆணவக் கொலைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதும் மிகவும் தேவையான ஒன்றாகும். தமிழ்நாடு அரசு தன்னுடைய செய்தி விளம்பரத் துறை வழியாக, வேண்டுகோளாக, வானொலி, தொலைக்காட்சிகள் வழியாக ஏன், குடும்ப நலத் திட்டம் போன்றவற்றுக்கு செய்யப்பட்டதைப் போல கலைக் குழுவினரைக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் பரப்ப வேண்டியதும், அவ்வாறான சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்லும் இயக்கங்களுக்குத் துணையாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டியதும் அவசியமான ஒன்று என்பதையும் மாநாடு சுட்டிக்காட்டுகிறது.*

## சாமியார்களால் ஏமாறும் மக்கள்

**தீர்மானம்-4:** *அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகளை நம்பி மக்கள் சாமியார்களிடம் போகிறார்கள். அவர்களின் ஆலோசனைகளைப் பெற அவ்வேளைகளில் நகைகளைப் பறிகொடுப்பதும், பாலியல் தொல்லைக்கு உள்ளாவதும், சில நேரங்களில் மரணத்தில் முடிவதும் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சிகளில், செய்திகளில் இந்த குற்றங்கள் தொடர்பான மூடநம்பிக்கைச் செய்திகளே முதலிடம் பெற்று வருகின்றன.*

*அரசியல் சட்டம் குடிமக்களின் கடமையாக 51A(h) அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் பிரிவுக்கு இவை எதிரானவை. பேய், பில்லி, சூனியம், நரபலி, மந்திரித்தல் போன்ற மூடநம்பிக்கைகளை குற்றமாக்கி ஏற்கனவே மகாராஷ்டிரா, கர்நாடகம், பீகார், ஒடிசா, சத்தீஸ்கர், அசாம் போன்ற மாநிலங்களில் மூடநம்பிக்கை தடைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசும் அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுவதில் இருந்து காப்பாற்றுவதற்கு மூடநம்பிக்கை தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்று மாநாடு வலியுறுத்துகிறது.*

## அமைச்சர்களின் கண்டனத்துக்குரிய மதச்சார்பு

**தீர்மானம்-5:** *வேளாண் துறை அமைச்சர் மாண்புமிகு வினோத் நிதிநிலை அறிக்கையை முன்கூட்டியே திருப்பதி ஏழுமலையானிடம் சமர்ப்பித்துள்ளார். நிதி அமைச்சர் மரிய வில்சன் ஜெபமாலையை வைத்துக்கொண்டு சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறார். சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஷாஜகான் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் பதவி ஏற்கும் போது இஸ்லாமிய குருக்களை வைத்து 'துவா' செய்கிறார். அனைத்து மதத்தினருக்கும் மதநம்பிக்கை இல்லாதவர்களுக்கும் சட்டப்படி மதச்சார்பின்மை அடையாளத்தோடு செயல்பட வேண்டிய அமைச்சர்கள் தங்கள் தனிமனித மத அடையாளத்தை ஆட்சிப் புலத்தில் வெளிப்படுத்துவது அரசமைப்பு சட்டம் வலியுறுத்தும் மதச்சார்பின்மைக்கு எதிரானதாகும்.*

*பாஜக ஆட்சி செய்யும் வேறு எந்த மாநிலத்திலும் கூட இதற்கு முன்னுதாரணம் இல்லை. தனிப்பட்ட மத நம்பிக்கையை அரசின் அடையாளமாக மாற்றுவதை இம்மாநாடு கண்டிக்கிறது. ஆளும் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் கொள்கைத் தலைவர்களாக ஏற்றுள்ள பெரியார், அம்பேத்கர் சிந்தனைகளுக்கும் இது எதிரானது என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது.*

## சுயஜாதி மறுப்பு இயக்கம்

**தீர்மானம்-6:** *'ஜாதிய சமூக உறவுகள்' தான் ஜாதியைக் காப்பாற்றி வருகின்றன. அதுவே ஆணவப் படுகொலைக்குத் தூண்டுதலாக அமைந்து விடுகிறது. தனது குடும்பத்தில் ஜாதி கடந்த திருமணங்களை ஏற்க விரும்பினாலும் ஜாதி சமூகம் அவமதிக்குமே, அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்ற மன அழுத்தத்துக்கு உள்ளாகி ஆணவப் படுகொலைகளுக்கும் தயாராகி விடுகிறார்கள்.*

*இந்த நிலையில் சுயஜாதி மறுப்புக்கான இயக்கத்தின் தேவை அவசியமாகிறது. ஜாதி சமூக இறுக்கத்தைத் தகர்க்க இம்மாநாட்டு மேடைக்கு பெயர் சூட்டப்பட்டுள்ள கானாடு காத்தான் வை.சு.சண்முகம் சுயஜாதி எதிர்ப்பாளராக ஜாதி எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்தவர் ஆவார். அதன் தொடர்ச்சியாக சுயஜாதி மறுப்பு அமைப்புகளை ஒவ்வொரு ஜாதிப் பிரிவில் அடங்கியுள்ள ஜாதி எதிர்ப்பாளர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் தொடங்க வேண்டும். ஜாதி எதிர்ப்பில் இது முக்கியமான திருப்புமுனையாக இருக்கும் என்று இம்மாநாடு கருதுகிறது.*








# ‘பரப்புரைகள் தொடர வேண்டும்’

*(பயணத்தில் குழுவினர் சந்தித்த நிகழ்வுகளை குழுவின் தலைவர்கள் மாநாட்டு மேடையில் விளக்கினர்.)*

### நாகர்கோவில் அணியின் தலைவர் நங்கவள்ளி கிருஷ்ணன் தனது உரையில் குறிப்பிட்டதாவது:

அதிக எண்ணிக்கையிலான தோழர்கள் பங்கெடுத்த அணி நாகர்கோவில் அணி! குறிப்பாக சேலம் தோழர்கள் 20-க்கும் மேற்பட்டோர் பரப்புரைப் பயணத்தில் முழுமையாக இருந்தனர். முன்னேற்பாடு குழுவினரும், பரப்புரைக் கூட்ட ஏற்பாட்டுக் குழுவினரும் உணவு, தங்குமிடம் ஆகியவற்றை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.




தென்மாவட்டங்களில் 20-க்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்தினோம். பொதுமக்கள் பலர் அடிக்கடி இதுபோன்ற கூட்டங்களை நடத்த வேண்டும் என்று பல இடங்களில் கேட்டுக் கொண்டனர்.

இரண்டு இடங்களில் பரப்புரை தடைபட்டது. பாஜக இந்துத்துவா கும்பல் சமூக வலைதளங்கள் வழியாக ஆட்களைத் திரட்டி ஒரு பதற்றத்தை நாகர்கோவில் பகுதியில் ஏற்படுத்தினர். திருப்பரங்குன்றம் பகுதியில் பாஜக மாநில பொறுப்பாளர் ஒருவர் பிரச்சாரத்தை புகைப்படம் எடுத்ததோடு காணொலியாகவும் எடுத்தார். திருப்பரங்குன்றம் காவல்நிலைத்திற்கு முன்பு தான் கூட்டம் நடைபெற்றது. கலவர முயற்சிகள் தோல்வியடைந்தன.

காவல்துறை 10 நிமிடங்கள் மட்டுமே பேச வேண்டும் என்று நிபந்தனை விதித்தது. ஆனால் 40-நிமிடங்களுக்கு மேல் கருத்துகளைப் பேசினோம். பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் காவல்துறையிடம் சமரசம் செய்து சரிபடுத்துவார்.

கழக வெளியீடுகள் ரூ.4615 விற்பனையானது. கடைவீதி வசூல் வழியாக ரூ.22,636 கிடைத்தது. கடைசியாக நடைபெற்ற கூட்டத்தில் மழையைப் பொருட்படுத்தாமல் நிழற்குடை போல் அமைத்து பரப்புரை மேற்கொண்டோம் என்றார்.

நாகர்கோவில் அணியில் பங்கேற்க மேலும் பல தோழர்கள் ஆர்வத்துடன் முன்வந்தனர். எண்ணிக்கையைக் கருதி பால்.பிரபாகரன் தவிர்த்தார். தோழர்.கணபதி இலக்கிய நயத்துடன் உரையாற்றினார். கோபி தோழர்கள் துண்டறிக்கை மற்றும் நிதி வசூல் பணிகளை சிறப்பாக மேற்கொண்டனர். பயணம் மிகுந்த மனநிறைவைத் தந்தது.

### பேராவூரணி பயணக்குழுத் தலைவர் நிர்மல்குமார் தனது உரையில் குறிப்பிட்டதாவது....

அனைத்து தோழர்களும் பேச்சாளர்களாகவும், களப்பணியாளர்களாகவும் வலம் வந்தனர். தினமும் ஒவ்வொரு தலைப்பிலும் தோழர்கள் உரையாற்றினர்.

பரப்புரைப் பயணத்தில் திருவேங்கடம், கலைச்செல்வன், மாரிமுத்து, கவிமணி ஆகியோர் தங்குமிடம், உணவு ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டனர். பேராவூரணி, பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் ஒருசில தோழர்களே இருக்கின்றனர். இருந்தாலும் பெரியாருக்கு எப்படி அஞ்சா நெஞ்சன் அழகிரியோ அப்படிபட்ட தளபதிகள் தான் நமது தோழர்கள்.




அதேபோல் நாச்சியார்கோவில் தோழர்.வெங்கடேசன் இல்லத்திற்கு சென்றபோது அவரது இணையர் வைக்கம், அவரது உறவினர்கள் சந்தனம், குங்குமம் வைத்த கடவுள் நம்பிக்கையாளர்கள். ஆனால் அவர்களது நெருங்கிய உறவினர்களைப் போல் கழகத் தோழர்களை கவனித்துக் கொண்டனர். குடும்ப உறுப்பினர்கள் போல் தோழர்களை அரவணைத்துக் கொண்டது நெகிழ்ச்சியாக இருந்தது.

ஜாதி எதிர்ப்பை நாடக வடிவில் நாங்கள் பரப்புரையை மேற்கொண்டோம். பாடகராக வந்த தோழர் வீரமணி ஜாதி சங்கத் தலைவராகவும், ஜாதி எதிர்ப்பாளர்களாக நிர்மல், திருவேங்கடம், தேன்மொழி ஆகியோரும் நடித்தனர். வடசேரி கூட்டத்தில் ஜாதி சங்கத் தலைவராக நடித்த வீரமணி, ஜாதி எதிர்ப்பாளராக நடித்த திருவேங்கடத்தை அடித்த போது, நாடகம் பார்த்துக் கொண்டிருந்த யாரென்றே தெரியாத ஒருவர் ஆவேசத்துடன் மேடை ஏறி ஜாதி சங்கத் தலைவராக நடித்த வீரமணி அவர்களை சட்டையைப் பிடித்து அடிக்கப் பாய்ந்தார். தோழர்கள் விவரம் சொன்னபிறகு அமைதியானார். நாடகம் இந்த அளவுக்கு மக்களிடம் கருத்துகளைக் கொண்டு சென்றது.

வழிநெடுக பரப்புரைக்கு மக்களிடம் ஆதரவு இருந்தது. பட்டுக்கோட்டை கூட்டத்தில் நாடகத்தைக் கண்டுகளித்த ஒரு பாட்டி சொன்ன கருத்து "தம்பி நீங்க சொல்றது உண்மைதான்; வேற ஜாதியில் திருமணம் பண்ணா, அப்படி ஆகிடும், இப்படி ஆகிடும்னு சொல்றாங்க நான் தேவர் ஜாதி; என்னோட பேரன் தாழ்தப்பட்ட ஜாதி பெண்ணை திருமணம் பண்ணிக்கிட்டான். இரண்டு பேரும் நல்ல வேலையில், நல்லா இருக்காங்க. குடும்பத்துடன் நல்லா இருக்கோம்" என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

பரப்புரையில் பேசிய கருத்துக்களின் நியாயத்தை உணர்ந்து பலரும் வாழ்த்தினார்கள். தங்களால் இயன்றதை நன்கொடையாக வழங்கினார்கள். கடந்த ஏழு நாட்களில் கடைவீதி வசூலாக 28,300 தொகையாக கிடைத்தது. எனது நண்பர் திடீரென தொலைபேசி செய்து பரப்புரைப் பயணம் நல்லா இருக்கு. நன்கொடை தருகிறேன் என ரூ.5000 வழங்கினார். கழகத் தலைவர், பொதுச் செயலாளர் குறித்த செய்திகளைத் தொடர்ந்து கவனிக்கிறேன். உங்கள் அமைப்பு தொடர்ந்து சமரசமில்லாமல் செயல்படுவது எனக்குப் பிடிக்கும், என்னால் வர இயலவில்லை. ஆகவே சிறுபங்களிப்பை தருகிறேன் என்றார்.

பரப்புரையில் கழகத் தோழர்கள் சிறப்பாகப் பணியாற்றினார்கள் நமக்கான ஆதரவு கழக எல்லைகளைக் கடந்து இன்றும் மக்களிடம் இருக்கிறது. திமுக தோழர்கள், ஈழ விடுதலையில் ஆர்வம் உள்ள தோழர்கள் பல இடங்களில் ஆதரவு தந்தனர். உணவு, தங்கும் இடம் உள்ளிட்ட ஏற்பாடுகளைச் செய்தனர்.

அதிராம்பட்டினத்தில் பெயர் சொல்லவிரும்பாத இருவர், பரப்புரையை கவனித்து ரூ.1000, 500 என நன்கொடை வழங்கினார்கள். முன்னாள் 'நாம் தமிழர்' கட்சித் தோழர் ஒருவர் கழகத் தலைவரை எனக்கு பிடிக்கும்; பெரியார் தான் எனக்கு தலைவர் என்றுகூறி தோழர்களுக்குத் தேநீர் வழங்கினார்.

பேராவூரணி பயணக்குழு இவ்வளவு சிறப்பாக பணியாற்றியதற்குக் காரணம் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி அவர்கள்தான். அனைவரையும் தங்கள் குழந்தைகள் போல் கவனித்துக் கொள்வார். எவ்வளவு செலவு ஆனாலும் அவரே தருவார். அனுபவம் வாய்ந்த கழகத்தின் மூத்த தோழர் அய்யனார் ஆகியோரின் வழிகாட்டுதலில் கூட்டு முயற்சியில் இந்தப் பரப்புரையை நாங்கள் சிறப்பாக செய்து முடித்தோம். துவரங்குறிச்சியில் பாஜக, சங் பரிவார் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கூட்டத்திற்கு காவல்துறையில் அனுமதி வாங்கினாலும், ஊராட்சியில் அனுமதி வாங்க வேண்டும் என்று புதிய நிபந்தனையைக் கூறி சலசலப்பை ஏற்படுத்தினார். அதை முறியடித்து பரப்புரையை எழுச்சியுடன் நடத்தினோம்.

தோழர் சின்னப்பத் தமிழர் (தமிழ் வழிக் கல்வி இயக்கம்) பரப்புரைப் படையை வரவேற்பு பதாகையுடன் தனது ஆதரவாளர்களுடன் வந்து பயணக்குழுவுக்கு தேவையான உதவிகளைச் செய்தார். பயணத்தில் தொடர்ந்து வந்தார்.

அதிராம்பட்டினத்தில் மூன்று தோழர்கள் பொருளாளர் துரைசாமி முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். பயணத்தில் மக்களிடமிருந்து அனுபவங்களை பெற்றோம். மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

### திருச்சி பரப்புரை அணியின் தலைவர் சென்னை உமாபதி பேசுகையில் குறிப்பிட்டதாவது..

இந்த பிரச்சாரப் பயணம் குறித்து தலைமைக் குழுவில் விவாதிக்கும்போது தென் மாவட்டங்களில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரையை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தேன். எனது கோரிக்கையை பரிசீலித்த கழகத் தலைமைக்கு நன்றி.




மக்களிடம் இந்தப் பரப்புரை நோக்கத்திற்கு பெரிய ஆதரவு இருக்காது. கடுமையான எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்தே சென்றோம். எங்கள் அணி சென்ற ஒரே இடத்தில் மட்டும் எதிர்ப்பு வந்தது. மற்றபடி மக்கள் ஆதரவு மிகுந்து இருந்தது.

தலைமைக்குழு உறுப்பினர் திருச்சி மனோகர் தொடக்க விழா பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்தார். தொடக்க பொதுக்கூட்டமாக திருச்சி மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. பயணம் என்றால் சென்னை தோழர்கள் உற்சாகத்துடன் இருப்பார்கள். எங்கள் அணியில் இரண்டு பெண்கள் முழுமையாக பயணித்தனர். ஒருவர் பாடகர் லதா, மற்றொருவர் இரண்யா.

புத்தக விற்பனை 12,585, கடைவீதி வசூல் ரூ.35,000 வழியாக கிடைத்தது.. புத்தக விற்பனையை தோழர் எட்வின், மயிலாப்பூர் இராவணன் ஆகியோரும் கவனித்துக் கொண்டனர்.

திருச்சியில் பெரியார் பெருந்தொண்டர் தமிழ்ச்சுடர் அவர்கள் இரண்டுநாள் தங்குவதற்கான எற்பாடுகளைச் செய்து கொடுத்தார். மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொண்டார். பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் பாடல்களைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

"எனக்கு 85 வயதாகிறது, தற்போதைய சூழலில் யார் பெரியார் கொள்கையைக் கொண்டு செல்வார்களோ என்ற கவலை இருந்தது. இந்தச் சிறுவன் திராவிட மகிழன் பாடல்களைக் கேட்ட போது அந்தக் கவலை நீங்கியது" என்று கண் கலங்கினார்.

பெரம்பலூரில் விஜயேந்திரன் (தி.க மாவட்டச் செயலாளர்) இல்லத்தில் தான் இரண்டு நாட்கள் தங்கி இருந்தோம். அவர் சிறப்பாக கவனித்துக் கொண்டார். குறிப்பாக இந்தத் தலைப்பில் பயணம் மேற்கொள்வது அவர்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவர் தனது ஒலிப்பெருக்கியை பரப்புரைக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கொடுத்துள்ளார். திராவிடர் கழகத் தோழர்கள் போகிற இடங்களில் எல்லாம் நல்ல வரவேற்பை வழங்கினர்.

கடைவீதி பிரச்சாரம் செய்த போது துண்டறிக்கை வாங்கிய ஒரு நபர் ஜாதி இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். உங்களுக்கு நன்கொடை கிடையாது என்று நேரடியாக மறுத்தார். இத்தகைய எதிர்மறை அனுபவங்களும் உண்டு. இன்னோரு இடத்தில் கடைக்காரர் நன்கொடை தருகிறார். ஆனால் கூட இருக்கிற நபர் கொடுக்கக் கூடாது என்று மிரட்டுகிறார். அங்கே தோழர்களுக்கு இடையில் வாக்குவாதம் உருவானது. ஜாதிய மனநிலையில் இருப்பதை உணர முடிந்தது. பரப்புரைக்கு ஆதரவாக பல நிகழ்வுகள் நடந்தன.

தொடர்ச்சி 8-ம் பக்கத்தில்

# காரைக்குடி மாநாட்டுக் காட்சிகள்






















# பயணத்துக்குத் தோழமை அமைப்புகளின் பேராதரவு

**நாகர்கோவில் அணி:**

**4வது நாள்:** திருநெல்வேலி, தென்காசியில் 09.08.2026 ஞாயிறு காலை 10.00 மணிக்கு சேரன்மகாதேவி பகுதியிலும், மதியம் 12.30 மணிக்கு வீரவநல்லூர் பகுதியிலும், மாலை 3.00




மணிக்கு தென்காசி மாவட்டம் ஆலங்குளம் பகுதியிலும், மாலை 5.30 மணிக்கு தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் பகுதியிலும் நடைபெற்றது.

கழக திருநெல்வேலி மாவட்டத் தலைவர் பால்வண்ணன் தலைமை வகித்தார். தென்காசி மாவட்டச் செயலாளர் சு.அன்பரசன் முன்னிலை வகித்தார். தென்காசி மாவட்டத் தலைவர் மாசிலாமணி வரவேற்புரை ஆற்றினார்.

பால்.பிரபாகரன்(கழகப் பரப்புரைச் செயலாளர்), நங்கவள்ளி அன்பு (சேலம் மாவட்ட அமைப்பாளர்), கணபதி (ஆத்தூர் நகரச் செயலாளர்), அழகேசன் (விசிக மாவட்டச் பொருளாளர் திருநெல்வேலி), செல்வசுந்தரசேகர் (பெரியார் உணர்வாளர் சேரன்மகாதேவி), சிவராஜ் (பகுஜன் சமாஜ் கட்சி மாவட்டப் பொருளாளர் திருநெல்வேலி), கருணாநிதி (பெரியார் உணர்வாளர் வீரவநல்லூர்), ச.பெரியார் பித்தன் (புஇமு), மு.தமிழ்ச்செல்வன் (பெரியார் உணர்வாளர்), ஜோயல் மில்டன் (ஆலங்குளம் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் திமுக), பொன். அறிவழகன் (தென்காசி மாவட்டச் சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் திமுக). மு. ராமசாமி (முன்னாள் பேரூர் செயலாளர் தென்காசி) ஆகியோர் பரப்புரையின் நோக்கம் குறித்து கருத்துரையாற்றினர். நிறைவாக ஓவியர் தமிழன் தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

பயணக் குழுத் தோழர்களுக்கு காலை உணவு திருநெல்வேலி மாவட்டத் தலைவர் பால்வண்ணன் ஏற்பாடு செய்திருந்தார். மதிய உணவு தென்காசி மாவட்டத் தலைவர் மாசிலாமணி, இரவு உணவு தென்காசி மாவட்டம் பேராசிரியர் திருநீலகண்டன் அவர்களும் ஏற்பாடு செய்திருந்தனர்.

**5வது நாள்:** 10.08.2026 அன்று திங்கள் காலை 10.00 மணிக்கு தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகிலும் , மதியம் 12. 00 மணிக்கு புளியங்குடி பகுதியிலும், மாலை 5.30 மணிக்கு மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியிலும் நடைபெற்றது.

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற (தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு, மற்றும் புளியங்குடி) கூட்டத்திற்கு தென்காசி மாவட்டத் தலைவர் மாசிலாமணி தலைமை தாங்கினார். தென்காசி பாலசுப்ரமணியம் முன்னிலை வகித்தார். மதுரை திருமங்கலத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு மதுரை மாவட்டக் கழகத் தலைவர் காமாட்சி பாண்டியன் தலைமை வகித்தார் மேலூர் பகுதி பொறுப்பாளர் சத்தியமூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், நம்பியூர் ரமேஷ், ஆத்தூர் கணபதி, மதுரை மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, கே. ஆர். தோப்பூர் கண்ணன் ஆகியோர் பரப்புரையின் நோக்கம் குறித்து கருத்துரையாற்றினர்.

புளியங்குடி நிகழ்வால் தி.மு.க.வை சேர்ந்த வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் முள்ளி குளம் சந்திரன் தோழர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். நிறைவாக மதுரை மாவட்டக் கழகத் தோழர் மதுரை.முருகேசன் நன்றி கூறக் கூட்டம் நிறைவு பெற்றது.

பயண குழு தோழர்களுக்கு காலை உணவு தென்காசி பாலசுப்ரமணியம் ஏற்பாடு செய்திருந்தார். மதிய உணவு கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஏற்பாடு செய்திருந்தார். இரவு உணவு மதுரை மாவட்டக் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**6வது நாள்:** 11.08.2026 செவ்வாய் காலை 9.00 மணிக்கு மதுரை திருப்பரங்குன்றம் பகுதியிலும், 11.00 மணிக்கு அவனியாபுரம் பகுதியிலும், மாலை 4.00 மணிக்கு டி. எம். எஸ் சிலை அருகிலும், கே. புதூர் பகுதியிலும் சிறப்பாக நடைபெற்றது.

காமாட்சி பாண்டியன் (மதுரை மாவட்டத் தலைவர்) தலைமை வகித்தார். கழக தோழர் முருகேசன் முன்னிலை வகித்தார். சத்தியமூர்த்தி (மதுரை மாவட்ட மேலூர் பகுதி பொறுப்பாளர்) வரவேற்புரையாற்றினார்.

தொடக்க நிகழ்வாக மேட்டூர் டி.கே. ஆர். இசைக்குழுவின் பறை முழக்கம் மற்றும் நாட்டுப்புற பாடகர் சித்திரசேனன், கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்) ஆகியோரின் பகுத்தறிவு பாடல்களுடன் சீனிவாசன் (மேட்டூர் குமரன் நகர் பகுதி செயலாளர்), அண்ணாதுரை (சேலம் மாவட்ட அமைப்பாளர்), காளியப்பன் ஆகியோரின் இசையுடன் கூட்டம் தொடங்கியது.

காமாட்சி பாண்டி (மதுரை மாவட்டத் தலைவர்), நங்கவள்ளி அன்பு (சேலம் மாவட்ட அமைப்பாளர்), கணபதி (ஆத்தூர் நகரச் செயலாளர்), கே. ஆர். தோப்பூர் கண்ணன், கழகத் தோழர் வாசுகி, தளபதி (மதுரை மாவட்டக் கழக காப்பாளர்), கவிஞர் ஜீவா (தி. மு. க தலைமைக் கழகப் பேச்சாளர்), ராமலிங்கம் (மக்கள் அதிகார கழகம்- மாநில பொறுப்பாளர்), மெய்யப்பன் (தமிழ் தேச குடியரசு இயக்கம்) , பரிதி (தமிழ் தமிழர் இயக்கம்) ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்து கருத்துரையாற்றினர்.

மீ.த. பாண்டியன் (தமிழ்நாடு மக்கள் பண்பாட்டு கழகத் தலைவர்), கழக பரப்புரைப் பயணம் குறித்து வாழ்த்துரையாற்றினார். நிறைவாக வேங்கை மாறன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

காலை உணவு மோகன் தாஸ் (கரூர் மாவட்டக் கழகத் தோழர்) ஏற்பாடு செய்திருந்தார். மதிய உணவு மஞ்சுளா ஸ்டாலின் (சி.பி.எம்) ஏற்பாடு செய்திருந்தார். இரவு உணவு தளபதி (மதுரை மாவட்டக் கழக காப்பாளர்) ஏற்பாடு செய்திருந்தார்

**7வது நாள்:** 12.08.2026 முதல் கூட்டம் காலை 10.00 மணிக்கு மேலூர் பகுதியில் நடைபெற்றது. சத்தியமூர்த்தி (மதுரை மாவட்ட மேலூர் பகுதி பொறுப்பாளர்) தலைமை வகித்தார். காமாட்சி பாண்டியன் (மதுரை மாவட்டத் தலைவர்) முன்னிலை வகித்தார். வேங்கை மாறன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் காமாட்சி பாண்டி (மதுரை மாவட்டத் தலைவர்), கணபதி (ஆத்தூர் நகரச் செயலாளர்), ரமேஷ் (நம்பியூர் ஒன்றியச் செயலாளர்) கூட்டத்தின் நோக்கம் குறித்து கருத்துரையாற்றினர்.

மெய்யர் (சி. பி.அய்.எம். எல் மதுரை மாவட்டச் செயலாளர்), நிலவழகன் (மக்கள் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர்), பிரகாஷ் (மக்கள் அதிகார கழகம்), முத்துமாணிக்கம் (வி.சி.க) ஆகியோர் கழகப் பரப்புரைப் பயணம் குறித்து கருத்துரையாற்றி வாழ்த்துகளைத் தெரிவித்தனர். தோழர் வாசுகி நன்றியுரையாற்றினார்.

காலை உணவு அழகர் பிரபாகரன் (கழக ஊடகப் பொறுப்பாளர்) ஏற்பாடு செய்திருந்தார். மேலூர் பகுதியைச் சார்ந்த பாலு (தி.மு.க) கழகத் தோழர்களுக்கு பருத்தி பால் வழங்கினார்.

கடைவீதி வசூல் துண்டறிக்கை பிரச்சாரம் வழியாக ரூ.11,499 கொளத்தூர் கணேசன், ராஜா தலைமையில் ராமச்சந்திரன், கோபிசெட்டிபாளையம் தோழர்கள் துரைசாமி, நடராஜன், மயில்சாமி, வனவாசி நகரத் தலைவர் செந்தில் ஆகியோர் நிதி திரட்டினர்.

புத்தக விற்பனைப் பணியைத் தோழர்கள் தங்கதுரை, தேவராஜ், கோகுல் ஆகியோர் மேற்கொண்டனர். ரூ.2,160 கழக வெளியீடுகள் விற்பனையானது. அனைத்து கூட்டங்களிலும் தொடக்க நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவின் பறை முழக்கம் மற்றும் நாட்டுப்புற பாடகர் சித்திரசேனன், கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்) ஆகியோரின் பகுத்தறிவு பாடல்களுடன், சீனிவாசன் (மேட்டூர் குமரன் பகுதிச் செயலாளர்), அண்ணாதுரை (சேலம் மாவட்ட அமைப்பாளர்), காளியப்பன் ஆகியோரின் இசையுடன் கூட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணன் (பயண ஒருங்கிணைப்பாளர்), அண்ணாதுரை (சேலம் மாவட்ட அமைப்பாளர்), நங்கவள்ளி அன்பு (சேலம் மாவட்ட அமைப்பாளர்), சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), தேவராஜ் (மாநகர அமைப்பாளர்), கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழகம்), கே. ஆர். தோப்பூர் கண்ணன், கொளத்தூர் செந்தமிழ் கலையமுதன், தங்கதுரை (இளைஞர் அணி அமைப்பாளர்), புளியங்குடி முள்ளிகுளம் சந்திரன், வாசு (தேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர்), கீழப்பாவூர் உமா, கீழப்பாவூர் ஒன்றியத் தலைவர் சேர்மதுரை, கோகுல், காளிப்பன், மதுரை மாவட்டக் கழகத் தோழர்கள் வேங்கை மாறன், மதுரை முருகேசன், சமூக ஆர்வலர் சூர்யா திருநெல்வேலி, பெரியாரிய உணர்வாளர்கள்: முதமிழ்ச் செல்வன், க.மாறன், கருணாநிதி மற்றும் த.வ.முகிலன் வீரவநல்லூர், பெரியார் குமார், ஆலங்குளம், செல்வமணி நெட்டூர் ஆகியோர் பங்கேற்றனர்.

**பேராவூரணி அணி:**

**4வது நாள்:** நீடாமங்கலம், கும்பகோணம், நாச்சியார் கோவில் ஆகிய இடங்களில் 09.08.2026 அன்று பரப்புரை நடைபெற்றது.

தோழர்கள் சோலை மாரியப்பன், வெங்கடேஷ் ஆகியோர் தலைமை உரையாற்றினர். ஜாதியில் திருமணம் தலைப்பில் திருப்பூர் முத்து, சென்னிமலை செல்வராஜ், வாழ்வில் மூடநம்பிக்கை தலைப்பில் கோபி.வேலுச்சாமி, சூலூர் பன்னீர்செல்வம், அய்யனார், மதத்தில் பார்ப்பனியம் தலைப்பில் முகில்ராசு, ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக அய்யனார், பரிமளராஜன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

கும்பகோணம் பகுதி திராவிடர் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட திராவிடர் கழகத் தோழர் வழக்கறிஞர் ரமேஷ் பயணத்தை வாழ்த்தியும் பெரியாரின் கொள்கைகளை விளக்கியும் உரையாற்றினர். நாச்சியார் கோவில் பகுதி திராவிட இயக்க ஆதரவாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நாச்சியார் கோவில் அருகிலுள்ள முனியாண்டி விலாஸ் உரிமையாளர் மின்சாரம் வழங்கி உதவினார்.

காலை உணவு பெரியாரிய உணர்வாளர் கல்யாணசுந்தரம் அவர் இல்லத்தில் வழங்கி சிறப்பித்தார். மதியம் மற்றும் இரவு உணவை கும்பகோணம் தோழர்கள் வெங்கடேஷ், ரஷ்யா, வைக்கம் மற்றும் குடும்ப உறவினர் தங்கள் இல்லத்தில் அசைவ உணவு வழங்கி மகிழ்ந்தனர். தங்குவதற்கு அவருடைய இல்லத்திலேயே அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார்.

**5வது நாள்:** உரத்தநாடு பேருந்து நிலையம், மதுக்கூர் பேருந்து நிலையம், வடசேரி பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் தோழர்கள் சிவசுப்பிரமணியம், பாரி ஆகியோர் தலைமையில் பரப்புரை நடைபெற்றது.

ஜாதியில் திருமணம் தலைப்பில் நிர்மல் குமார், மதத்தில் பார்ப்பனியம் தலைப்பில் அய்யனார், முகில்ராசு, சூலூர் பன்னீர்செல்வம் வாழ்வில் மூடநம்பிக்கை குணா, கலைச்செல்வன், சூலூர் .பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக துரைசாமி, அய்யனார் சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் கவிஞர். கவிமுருகன் பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தை விளக்கியும் வாழ்த்தியும் உரையாற்றினார். பெரியாரிய உணர்வாளர் சுடர்வேந்தன் பயணக்குழு தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். காந்தி அரிசி கடை உரிமையாளர் மின்சாரம் வழங்கி உதவினார்.

ஈரோடு பாபு புத்தக விற்பனை செய்தார். பேருந்து நிலையத்தில் மாலை நேரத்தில் கூடியிருந்த பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் மாணவிகள் துண்டறிக்கைகளை பெற்றும் ஆதரவு தெரிவித்தும் கூட்டத்தை முழுமையாக கவனித்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் கவி முருகன் தேநீர் வழங்கினார். காலை உணவு பாரி ஏற்பாடு செய்தார். பயணக்குழு தோழர்களுக்கு திமுக கிளை கழகச் செயலாளர் ராஜா இரவு உணவை வழங்கி தோழர்களை வாழ்த்தி குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

தொடர்ச்சி 7–ஆம் பக்கத்தில்

# வணிகர்கள், பொதுமக்கள் பயணக்குழுவுக்குப் பாராட்டு!

6–ஆம் பக்க தொடர்ச்சி..

**6ம் நாள்:** பட்டுக்கோட்டை அம்பேத்கர் சிலை அருகிலும், கைகாட்டி பேருந்து நிலையத்திலும், வடகாடு பேருந்து நிறுத்தத்திலும் ஆக-11 அன்று முறையே பாரி, கலைச்செல்வன், சின்னப்பத்தமிழர் ஆகியோர் தலைமையில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழகப் பொருளாளர் துரைசாமி, பெரியாரின் தளபதி பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரி சிலைக்கு நல்லதம்பி ஆகியோர் மாலை அணிவித்தனர்.





எழுகதிர்(தமிழ் வழிக் கல்வி இயக்கம்) வரவேற்புரை ஆற்றினார். ஜாதியில் திருமணம் என்ற தலைப்பில் வீரமணி-நிர்மல்குமார் இருவரும் கேள்வி பதில் பாணியில் உரைநிகழ்த்தினர், வாழ்வில் மூடநம்பிக்கை என்ற தலைப்பில் சூலூர் பன்னீர்செல்வம், கலைச்செல்வன், மதத்தில் பார்ப்பனியம் என்ற தலைப்பில் முகில்ராசு, தேன்மொழி, ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக துரைசாமி, அய்யனார், சின்னபத்தமிழர் (தமிழ்மொழிக் கல்வி இயக்கம்) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் திராவிடர் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். பட்டுக்கோட்டையில் ரயில்வே கேட்டில் தோழர்கள் கிருஷ்ணன், நல்லதம்பி, ஜெயச்சந்திரன் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் துண்டறிக்கை வழங்கினர். கூட்டம் முடிவடைந்து செல்லும் வழியில் பட்டுக்கோட்டை பெரியார் சிலைக்கு மலேசியா பெரியசாமி மாலை அணிவிக்க பரப்புரைப் பயணத் தோழர்கள் கொள்கை முழக்கங்கள் எழுப்பினர்.

பெரியார் உணர்வாளர் அண்ணாதுரை காலை உணவு வழங்கினார். மதிய உணவு ஏற்பாடு எஸ்.டி.பி.அய் ரஜாக், கரம்பக்காடு காமராஜ் இல்லத்தில் வழங்கினார். பேராவூரணி அணித் தோழர்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இரவு உணவை கரு. காளிமுத்து வழங்கினார். வடகாடு பகுதியில் சின்னப்பத் தமிழர் தலைமயில் தமிழ்வழிக் கல்வி இயக்கத்தினர் பதாகையுடன் பயணக்குழுத் தோழர்களை வரவேற்றனர்.

**7 ஆம் நாள்:** கொத்தமங்கலம் பேருந்து நிறுத்தம், அறந்தாங்கி பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் பரப்புரை நடைபெற்றது.

காலை பேராவூரணி ரயில்வே கேட் போடப்பட்டதால் அங்கு வாகனங்களில் காத்துக்கொண்டிருந்த மக்களிடம் துண்டறிக்கைகளை தோழர்கள் நல்லதம்பி, கிருஷ்ணன், பன்னீர்செல்வம் ஆகியோர் வழங்கினார்கள்.

சின்னப்பத் தமிழர், திருவேங்கடம் (தலைமைக்குழு உறுப்பினர்), எழுகதிர் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்டச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செங்கோடன், திமுக இளைஞரணி பொறுப்பாளர் சேதுபதி, தனித்தமிழ் இயக்கம் சிவானந்தம், மஜக மாவட்டச் செயலாளர் முபாரக் அலி ஆகியோர் பரப்புரைப் பயணத்தை வாழ்த்தியும், பயணத்தின் நோக்கத்தை விளக்கியும் உரையாற்றினர்.

ஜாதியில் திருமணம் தலைப்பில் கலைச்செல்வன், மதத்தில் பார்ப்பனியம் தலைப்பில் தேன்மொழி ஆகியோர் உரையாற்றினர். காலை உணவை கொத்தமங்கலத்தில் தோழர்கள் அருணகிரி (எம்.எல்), எழுகதிர், ரத்தினம் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

அறந்தாங்கிக்கு செல்லும் வழியில் சின்னபத் தமிழர் அவர்களின் தம்பி இல்லத்தில் அனைவருக்கும் எலுமிச்சை பழச்சாறு பலாப்பழங்கள் கொடுத்தனர். புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பாளர் ரமேஷ் கண்ணன் ஆதரவு தெரிவித்து பயணக்குழுத் தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். மோகன கிருஷ்ணன் புத்தக விற்பனைப் பணியைச் செய்தார்.

அனைத்து கூட்டங்களிலும் வீரமணி-கிருஷ்ணன் ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்கள் பாடினார்கள். தோழர்கள் நிர்மல்குமார் -வீரமணி- திருவேங்கடம், தேன்மொழி ஆகியோர் நாடகம் வழியாக ஜாதி எதிர்ப்புப் பரப்புரை மேற்கொண்டனர். நாடகத்தை பார்த்த பொதுமக்கள் பலரும் பாராட்டினார்கள்.

அனைத்து கூட்டங்களிலும் தோழர்கள் திருப்பூர் குணா, மடத்துக்குளம் சிவானந்தம், முகில்ராசு சூலூர். பன்னீர்செல்வம், நல்லதம்பி பாபு, பேராவூரணி ஜெயச்சந்திரன், விவேகா ஆகியோர் ஒலிபெருக்கி அமைக்கும் பணியையும் துண்டறிக்கை விநியோகம், கடைவீதி வசூல் பணிகளைச் செய்தனர்.

## திருச்சி அணி:

**4வது நாள்:** அரியலூர் மாவட்டம் செந்துறையில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கம் எழுப்பி நான்காம் நாள் பரப்புரைப் பயணத்தை ஆக-9 அன்று தொடங்கினர்.

அரியலூர் குன்னத்தில், பெரம்பலூர் நாலு ரோட்டில், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பரப்புரை நடைபெற்றது.








கழக பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை. தாமோதரன், தமிழ்நாடு பொதுவுடமைக் கட்சித் தலைவர் செல்வமணியன், பொன். தங்கராசு (புஇமு), மு.விஜயேந்திரன் (தி.க மாவட்டச் செயலாளர்), சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, ஆகியோர் கருத்துரையாற்றினர். பயணக்குழுத் தோழர்களுக்கான தங்கும் வசதிகளையும், உணவு ஏற்பாடுகளையும் தி.க மாவட்டச் செயலாளர் விஜயேந்திரன் செய்து கொடுத்தார்.

அரியலூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பரப்புரைப் பயணத்தின் போது பள்ளி மாணவிகள் ஆர்வமுடன் வந்து அமர்ந்து கருத்துகளைக் கேட்டு, கழக வெளியீடுகளை ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். அவ்வழியே சென்ற இளம் பெண் வழக்கறிஞர் ஒருவர், பரப்புரைப் பயணத்தை கவனித்து, தோழர்களுக்கு குளிர்பானங்களை வாங்கிக் கொடுத்தார். சுதாகர் பங்கேற்று ஆதரவளித்தார்.

**5வது நாள்:** பெரம்பலூர் அம்மாபாளையம், முசிறி, மணப்பாறை ஆகிய பகுதிகளில் ஆக-10 அன்று பரப்புரை நடைபெற்றது. பொன். தங்கராசு (புஇமு), சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

பரப்புரையைக் கவனித்த சவுந்தர்ராஜன் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். கழக வெளியீடுகள் அனைத்தையும் வாங்கிச் சென்றார்.

5வது நாள் நிறைவுக் கூட்டம் மாலை 6 மணிக்கு, திருச்சி மணப்பாறையில், கழக ஒன்றியச் செயலாளர் வி. தனபால் தலைமையில், பொதுக் கூட்டமாக நடைபெற்றது. விராலிமலை ஒன்றியச் செயலாளர் குமரேசன் வரவேற்புரையாற்றினார்.

திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் துரை. காசிநாதன், பாவலர் மு. பசுலுதீன் உரையாற்றினர். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர், ஆசிரியர். சிவகாமி பேசுகையில், மூடநம்பிக்கைகளால் அதிகமாக பாதிக்கப்படும் பெண்கள், அதே மூடநம்பிக்கைகளை பின்பற்றுபவர்களாகவே இருப்பது குறித்தும், தமிழ்நாட்டு பெண்கள் மூடநம்பிக்கைகளை விடுத்து பெரியார் வழிக்கு திரும்ப வேண்டிய தேவை குறித்தும் உரையாற்றினார்.

ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, "வரலாற்றை அறிந்துகொள்ள மறுப்பவர்களுக்கு கொள்கைத் தலைவர்கள் எதற்கு" என்று வினவினார். பிற்படுத்தப்பட்டோரின் பதவிகளைப் பறிக்கும் பார்ப்பனர்களை எதிர்க்காமல், ஒடுக்கப்பட்டோரை எதிர்ப்பது புத்திசாலித்தனமா?" என்று கருத்துரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "தமிழ்நாட்டு பிரிவினையை முன்வைத்த மலையாள நாட்டினர் குறித்தும், ஆகம விதிகள் தற்கால பார்ப்பனருக்கே பொருத்தமற்றதாக இருப்பது குறித்தும் நிறைவுரையாற்றினார். நடுப்பட்டி பாலசுப்பிரமணி நன்றி கூறினார். உணவு ஏற்பாடுகளை தமிழக வாழ்வுரிமைக் கட்சிப் பொறுப்பாளர் இராவணன் கவனித்துக் கொண்டார். அய்ந்தாம்நாள் தோழர்களின் துண்டறிக்கை பிரச்சாரத்துக்கு வணிகர்களிடம் பெரும் வரவேற்பு இருந்தது.

**6வது நாள்:** மணப்பாறை காமராஜர் அரசு மருத்துவமனை அருகில், விராலிமலை செக்போஸ்ட், புதுக்கோட்டை இலுப்பூர் ஆகிய இடங்களில் ஆக-11 அன்று பரப்புரை நடைபெற்றது.

தனபால் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் துரை. காசிநாதன், பாவலர் மு. பசுலுதீன், பாடகர் சத்யா ஆகியோர் பிரச்சார பயணத்தின் நோக்கத்தை விளக்கிக் கருத்துரையாற்றினர். அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, தலைமைக் குழு உறுப்பினர் காவை.ஈஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பெரியார் பிஞ்சு திராவிட மகிழனின் துண்டறிக்கை பிரச்சாரம் மக்களை பேரார்வம் கொள்ளச் செய்தது. பள்ளி மாணவிகள் ஆர்வத்துடன் கழக வெளியீடுகளை வாங்கிச் சென்றனர்.

**7வது நாள்:** ஆக-12 அன்று புதுக்கோட்டை திருமயம் பகுதியில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிவகங்கை கானாடுகாத்தானில் துண்டறிக்கை பரப்புரையை தோழர்கள் மேற்கொண்டனர்.

கழக வெளியீடுகள் ரூ.7953க்கு விற்பனையாகின. ரூ.11,590 கடைவீதி வசூல் வழியாக கிடைத்தது. அனைத்துக் கூட்டங்களிலும் தோழர்கள் லதா, சத்யா, திராவிட மகிழன், உமாபதி, கார்மேகம் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பாடப்பட்ட பாடல்கள் மக்களை வெகுவாக ஈர்த்தது.

ம.கி. எட்வின் பிரபாகரன், இராவணன், ஆ.வ. வேலு, சுகுமார், ஏசுகுமார், கடலூர் சிவா, இரண்யா, சு.கோபிநாத், த.நா.சூர்யா, மயிலை அருண், வீரா, அசோக், சுரேந்தர், கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நெகிழ்ச்சியான நிகழ்வுகள்

அம்மாபாளையம் பகுதியில் துண்டறிக்கைப் பிரச்சாரத்தின் போது இரண்டு சிறுவர்கள் மெக்கானிக் கடையில் இருந்தார்கள். எங்களைப் பார்த்ததும் அந்தக் கடையின் உரிமையாளர் வெளியேறி கடைக்கு பின்னால் போனார்.

நாங்கள் அந்தச் சிறுவர்களிடம் துண்டறிக்கைய கொடுத்தோம். அந்த சிறுவன் பார்த்த உடனே எங்ககிட்ட கைய காட்டி இருக்க சொல்லி உரிமையாளர் பின்னாடி போய் சிறிது நேரத்தில் ரூ.10 நன்கொடை வழங்கினார். உரிமையாளரிடம் தொந்தரவு செய்து நன்கொடை வழங்கினார்கள் சிறுவர்கள். நன்கொடை தந்த சிறுவனின் பெயர் ஜெயப்பிரகாஷ். தோழர்களுடன் குழு படம் எடுத்துக் கொண்டான்.

இலுப்பூர் பகுதியில் நிகழ்வு முடிந்து வண்டி கிளம்ப தயாராகும் போது அங்கே வந்த பள்ளிச் சிறுவர் இருவர் துண்டறிக்கையைப் படித்துவிட்டு ஏதாவது புத்தகம் கிடைக்குமா? என்று கேட்டு ஆவலோடு வாங்கிச் சென்றனர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# உழைப்புக்குக் கிடைத்த வெற்றி




மாநாட்டுப் பொறுப்பாளர்கள் காரைக்குடி இளங்கோ, பெரியார் முத்து விடுத்துள்ள அறிக்கை.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் “வாழ்வியல் மாற்றத்திற்கான பரப்புரைப் பயணத்தின்” நிறைவு மாநாடு, 12.08.2026 அன்று காரைக்குடியில் எழுச்சியுடனும், சிறப்புடனும், வரலாற்றில் இடம்பிடிக்கும் வகையிலும் நடைபெற்று முடிந்துள்ளது.

தோழர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ள தென் மாவட்டத்தில் இத்தகைய சிறப்பான மாநாட்டை நடத்த முடியும் என்பதை காரைக்குடி மாநாடு நிரூபித்துள்ளது. இது ஒரு மாநாட்டின் வெற்றி மட்டுமல்ல; சிவகங்கை மாவட்டத்தில் இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் புதிய தொடக்கம்.

காரைக்குடியில் மாநாடு நடத்தப்படும் என்று தலைமைக்குழு அறிவித்தபோது, “இவ்வளவு பெரிய மாநாட்டை நம்மால் நடத்த முடியுமா?” என்ற தயக்கம் எங்களுக்குள் இருந்தது. ஆனால் தலைவர், தலைமைக்குழு மற்றும் முன்னணித் தோழர்களின் வழிகாட்டுதலும், மாவட்டத் தோழர்களின் அர்ப்பணிப்பும், தமிழகம் முழுவதிலுமிருந்து கிடைத்த ஒத்துழைப்பும், நன்கொடையாளர்களின் ஆதரவும் அந்தத் தயக்கத்தை நம்பிக்கையாக மாற்றின. நம்பிக்கை செயலாக மாறியது; செயல்பாடு வரலாற்று வெற்றியாக மாறியது.

மாநாட்டிற்கான நன்கொடை திரட்டும் பணிக்காக காரைக்குடியிலேயே தங்கி, இரவு பகல் பாராமல் உழைத்த அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், பெரியார் நம்பி, குமரேசன் ஆகியோருக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி.

மாநாட்டு மேடை மற்றும் அரங்கின் வடிவமைப்பை நேர்த்தியாகவும், அழகியலுடன் உருவாக்கித் தந்த சென்னைத் தோழர்கள் அருண், குமார், எழிலரசன், பிரபாகரன், இளவரசன் மற்றும் அன்னூர் விஷ்ணு, படங்கள் எடுத்த கபிலன் ஸ்டுடியோ விஜி உள்ளிட்டோருக்கு நன்றி.

காரைக்குடியில் தொடர்ந்து களப்பணியாற்றிய தோழர்கள் பெரியார் முத்து, இளங்கோவன், ரமேஷ் உள்ளிட்ட தோழர்களுக்கும், மாநாட்டுப் பணிகளில் முன்னின்று செயலாற்றிய சரவணன், பாலச்சந்திரன், ஆறுமுகம், மணிமாறன், முத்துக்குமார், தாமரை, பொள்ளாச்சி தோழர்கள் உள்ளிட்ட எண்ணற்ற தோழர்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல இரவுகளைக் கடந்து, தூக்கத்தையும் ஓய்வையும் பொருட்படுத்தாமல், தனிப்பட்ட பணிகளையும் ஒதுக்கி, இயக்கப் பணிக்காகத் தோழர்கள் உழைத்தனர். அந்த உழைப்பு சுமையாக அல்ல; சமூக மாற்றத்திற்கான மகிழ்ச்சியான பணியாகவே இருந்தது. காவல்துறை அனுமதி கடைசி நேரம் வரை சிக்கலாக இருந்த நிலையிலும், பேரணி தொடங்குவதற்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அனுமதி கிடைத்த நிலையிலும், தோழர்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் சுமார் ஒரு கிலோமீட்டர் நீளமான பேரணியை காரைக்குடியின் வரலாற்றுப் பேரணியாக மாற்றியது.

காரைக்குடியில் புதிய வரலாறு படைத்துள்ள மாநாடும் பேரணியும் பல்வேறு கட்சிகள், இயக்கங்கள், சனநாயக அமைப்புகள் என அனைவரையும் திரும்பிப் பார்க்கவைத்துள்ளது என்பது மிகையல்ல. இயற்கையின் இடையூறுகளையும் கடந்து மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. ஆனால் இது நமது பயணத்தின் முடிவல்ல.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வோம். அவற்றை செயலாக்குவதற்கான களப்பணியைத் தொடர்ந்து முன்னெடுப்போம். இந்த மாநாடு தோழர்களுக்குள் உருவாக்கியுள்ள புதிய உற்சாகத்தை அமைப்பின் வளர்ச்சியாக மாற்றுவோம். தயக்கத்தோடு தொடங்கிய பயணம், தன்னம்பிக்கையோடு நிறைவடைந்துள்ளது. “முடியுமா?” என்று கேள்வி எழுந்த இடத்தில், “முடியும்” என்று நிரூபித்திருக்கிறோம்.

இந்த வெற்றிக்குப் பின்னால் உழைத்த ஒவ்வொரு தோழருக்கும், நன்கொடையாளர்களுக்கும், ஆதரவளித்த அனைவருக்கும், மாநாட்டில் பங்கேற்ற தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் சிவகங்கை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வெற்றி நிறைவு அல்ல - புதிய களப்பணிக்கான தொடக்கம்! தொடர்ந்து களத்தில் நிற்போம்; தீர்மானங்களைச் செயலாக்குவோம்; அமைப்பை வலுப்படுத்துவோம்; சமூக மாற்றத்திற்காகத் தொடர்ந்து போராடுவோம்.

## பேரணியில் முழக்கங்கள்

பேரணியில் கழகத் தோழர்கள் எழுப்பி வந்த முழக்கங்கள் மக்களைக் கவர்ந்தது.

ஒழியட்டும் ஒழியட்டும்!
மக்களைப் பிரிக்கும் பார்ப்பனியம்
ஒழியட்டும் ஒழியட்டும்

சுயமரியாதை வாழ்க்கையே
சுகமான வாழ்க்கை

பில்லி,சூனியம்,ஜோசியம் எல்லாம்
சாமியார்கள் வயிறு வளர்க்க உதவுது
காசை எல்லாம் செலவு செய்து
தமிழர் வாழ்வு சீரழியுது!

நடந்ததைச் சொல்லும் ஜோதிடத்தால்
நடக்கப் போவதை சொல்ல முடியுமா?
அறிவுடனே நாம் இருந்தால்
ஜோதிடப் புரட்டு நடக்குமா?

ஜாதி மறுப்பு திருமணம் செய்வீர்
காதலோடு மகிழ்வாய் வாழ்வீர்

ஜாதியத்தைக் காப்பாற்ற
பெண்களைத்தான் நம்புறான்!
பெண்கள் உரிமை பேசினால்
நான் ஆம்பள என்கிறான்.

தடுத்திடுவோம் தடுத்திடுவோம்
ஜாதி ஆணவக்கொலையைத்
தடுத்திடுவோம்

காதல் செய்வீர் காதல் செய்வீர்
இளைஞர்களே காதல் செய்வீர்
ஜாதி ஒழிக்க காதல் செய்வீர்

சட்டமியற்று சட்டமியற்று
ஜாதி ஆணவப் படுகொலைக்கு
எதிராக சட்டமியற்று

வேண்டாம் வேண்டாம்
ஜாதிக்குள்ளே திருமணம்
வேண்டவே வேண்டாம்

வாழ்வில் மூடநம்பிக்கை
வேண்டாம் வேண்டாம்

சனாதனம் என்பது பார்ப்பனியமே
பார்ப்பனியம் என்பது ஜாதியமே
ஜாதி அமைப்பை தகர்த்திடுவோம்
சமத்துவ சமூகம் படைத்திடுவோம்

பாழாகுது பாழாகுது
ஜோதிடம் – ஜாதகத்தால்
தமிழன் வாழ்க்கை பாழாகுது

நாள் கிழமை பார்க்கிறது
நல்ல நேரம் பார்க்கிறது
பரிகார பூஜையால
பார்ப்பான் பாக்கெட் நிறையுது

ஏமாறாதே ஏமாறாதே
ஜாதகம் பார்ப்பவன் கிட்ட
ஏமாறாதே ஏமாறாதே

வாஸ்து சாஸ்திரம், வான சாஸ்திரம்
விஞ்ஞானம் என்று சொல்லுறான்
தமிழன் காசைத் திங்கிறான்

சொர்க்கம் நரகம் எங்கே இருக்கு?
செயற்கை கோளில் காட்டச் சொல்லு.

ஜாதிச் சுவரை இடித்து விட்டு
வெளியில் வா, வெளியில் வா
பெண் இனமே வெளியில் வா

பண்பாடு கலாச்சாரம், பழக்க வழக்கம்
என்று சொல்லி பெண்ணை அடிமை
படுத்துறான், பெண்ணை இழிவும்
படுத்துறான்

கல்லானாலும் கணவன் என்பதும்
புல்லானாலும் புருஷன் என்பதும்
முட்டாள்தனமே முட்டாள்தனமே

*4-ம் பக்க தொடர்ச்சி..*

மன்னார்குடியில் பரப்புரையைக் கவனித்த அதிமுக பிரமுகர் பரப்புரை முடிந்ததும் தோழர்களைப் பாராட்டி தேநீர் செலவுகளுக்கு ரூ.500 வழங்கினார். மீண்டும் தோழர்களை அழைத்து உணவுக்கு ஏற்பாடு செய்ய முன்வந்தார். தோழர்கள் ஏற்கெனவே ஏற்பாடு செய்துள்ளனர் என்றனர். மீண்டும் ரூ.500 கொடுத்து உணவுச் செலவுகளுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

பெரம்பலூரில் ஒரு வயதான அம்மா ரூ.100 நன்கொடை வழங்கினார். அவர் ‘என் பையன் இந்த பெரியார் கட்சியில் தான் இருந்தான், அவன் உடல் நலமின்மையால் இறந்துவிட்டான். அவன் உயிரோடு இருந்திருந்தால் உங்க கூட்டத்துக்கு வந்திருப்பான். அவன் நினைவாக உங்களுக்கு கொடுக்கிறேன்” என்றார். இப்படியும் பல இடங்களில் நெகிழ்ச்சியான நிகழ்வுகள் இடம்பெற்றன. ஜாதி எங்கே இறுக்கமாக இருக்கிறதோ அங்கே நாம் பரப்புரைகளை நடத்த வேண்டும். எனவே பெரியாரியக்கத்தின் அடிப்படைக் கொள்கையான ஜாதி ஒழிப்புக்கு ஆண்டுதோறும் ஒரு பிரச்சாரத்தைத் தென் மாவட்டத்தில் நடத்த வேண்டும்.

தோழர்கள் சத்யா-லதா அவர்களின் முன்னெடுப்பில் இந்தப் பயணத்துக்காக சென்னை மாவட்டக் கழகம் சார்பில் மூன்று பரப்புரைப் பாடல்களை உருவாக்கினோம். அவர்களுக்கு நன்றி. தோழர் யேசுகுமார் கொடிகாத்த குமரன் போல் கொடியுடனே இருப்பார். தோழர் சூர்யா பரப்புரை வாகனத்தை 600 கி.மீ கடந்து ஓட்டி வந்தார். தோழர் சுகுமார் ஒலிபெருக்கி அமைக்கும் பணிகளை மேற்கொண்டார். தோழர்கள் கோபி, அருண் கடைவீதி வசூல் பணிகளை மேற்கொண்டனர். தோழர் வேலு குழுவை ஒருங்கிணைத்து பணிகளை மேற்கொள்ளச் செய்தார். புதுக்கோட்டை பழனிவேல் ஆசிரியர் மூன்று நாட்களாக எங்களுடன் இருந்தார். பரப்புரைப் பயணம் புதிய உற்சாகத்தைத் தந்தது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 20,2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran